ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2105/46 - 2019 ජනවාරි මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.01.10
*2105/46 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: கேடீஎஸ்/பீபிகே/4/4/17.
காணி அமைச்சின் குறிப்பு இல.: எல்டீ/05/2004/ஏச்டபிள்யூ.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், பஸ்பாகே கோறளை பிரதேச செயலாளர் பிரிவில், பஸ்பாகே கோறளை சிறு பிரிவில், வட்டார இல. 1104, பள்ளேகம கிராம அலுவலர் பிரிவில் உள்ள, பள்ளேகம கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதி சார்பாக, கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2015.05.29 ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல. மஹா 6426 இல் துண்டு இல. 01 இல் விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.0229 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய ஒரு (01) காணித் துண்டின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு :

*01.* **துண்டு இல. 1**
காணியின் பெயர் : கல்லம்புதெனிய ; விபரம் : நெல் வயல் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : சுனேத்ரா குமாரி உதுவன, இல. 236/9, தொலஸ்பாக வீதி, நாவலப்பிட்டி (காணி எடுத்தற் சட்டம் 38 (அ) பிரிவின் கீழ் காணி எடுக்கப்படுகின்றது ; விஸ்தீரணம்: 0.0229 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பஸ்பாகே கோறளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச செயலாளர்,
பஸ்பாகே கோறளை.

பிரதேச செயலகம்,
பஸ்பாகே கோறளை,
*2018.*

*1 - 649*